சங்கத்தின் பெயர்: பட்ல் ஃபிளாரிசிங் கல்வி சங்கம்

சங்கத்தின் - நோக்கங்கள்:

1. இச்சங்கம் அரசியல் ஈடுபாடுகொள்ளாது.

2. இச்சங்கம் லாப நோக்கம் எதுமின்றி செயல்படும்

3. இச்சங்கம் கல்வி வளர்ச்சிக்காக பாடுபடும்

4. ஏழை எளிய மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக கல்வி பயில உதவி செய்தல்

5. பள்ளி கூடங்கள் நிறுவி, பிற பள்ளிகளுக்கு முன்மாதிரியாக அமைத்தல்

6. தொழில் கல்வியையும் பயிற்றுவித்தல்

7. விளையாட்டு போட்டிகள் நடத்தி மாணவ மாணவியர்களுக்கு பரிசு வழங்குதல்.

8. மாணவர்களுக்கு நல்லொழுக்கம், தீண்டாமை, ஒற்றுமை முதலியவற்றை போதித்தல்.

9. தொழில் கல்வியையும் பயிற்றுவித்தல்.

10. இச்சங்கத்தின் நோக்கங்களைக் கொண்ட இதர சங்கங்களுடன் ஒற்றுமையுடன் இருத்தல்.

11

12

13

விதிகள்:

1. சங்கத்தின் பெயர்:

பட்ஸ் ஃபிளாரிசிங் கல்வி சங்கம்

2. சங்கத்தின் விலாசம்:

தங்கச்சியம்மாபட்டி, தாராபுரம் ரோடு, ஒட்டன்சத்திரம்624 619

3. சங்கம் ஸ்தாபிதம் செய்த நாள்:

3.5.1990

4. எந்த மாவட்டப்பதிவாளர் எல்லைக்குள் ஸ்தாபிதம்செய்யப்பட்டுள்ளது:

பழனி மாவட்டப்பதிவாளர் எல்லைக்குள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

5. சங்கத்தின் வேலை நேரம்:

காலை 10.00மணி முதல்12.00மணிவரை

மாலை 2.00மணி முதல் 5.00மணிவரை

6. சங்கத்தின் நோக்கங்களும், கொள்கைகள் மீது மேற்கொள்ளப்படும்நடவடிக்கை:

யாதலில் கண்டுள்ள நோக்கங்கள் கொள்கைகளை நல்லமுறையில் நிறைவேற்ற பாடுபடுதல்

7. சங்கத்தின் மீது எடுக்கப்படும் நடவடிக்கை யாருடையபெயரில் எடுக்கப்படும்:

சங்கத்திற்காகவும், சங்கத்தின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் சங்கத்தின் தலைவர் பெயரில் எடுக்கப்படும்.

8. சங்கத்தின் நடவடிக்கைகளுக்கு அறிவுரை வழங்கக்கூடிய நபர்இருப்பின்:

செயற்குழுவின் முடிவுப்படி செயல்படும்

9. சங்கத்தின்அன்றாட விடயங்கள் கவனிக்கும் பொறுப்பாளர் விபரம்:

சங்கத்தின் செயற்குழுவின் முடிவுப்படி செயல்படும். அவரது ஊதிய விபரம் தை சங்கத்தின் செயற்குழுவே முடிவு செய்யும்.

10. சங்க உறுப்பினர் சேர்த்தல்:
---

1. 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலரும் இச்சங்கத்தில் உறுப்பினராக சேர தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.

2. சவுழக்கட்டணம் ரூ 10/- மாதச் சந்தா ரூ 5.00 ஆண்டு சந்தா இல்லை.

3. ஐந் சந்தா தொகையை செலுத்தவேண்டிய நாள்: பிரதி மாதம்21ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

4. சந்தா காலதாமதமாக செலுத்தப்படும் ஆனால் அபராதம்: இல்லை.

11. உறுப்பினர்கள் விலக்குதல் எந்தச் சூழ்நிலையில் விலக்குதல் மற்றும் விலக்குவதற்கான காரணங்கள்:

1. சங்கத்திற்கு ஊந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்ளும் எந்த உறுப்பினராக இருந்தாலும் சங்கத்திலிருந்து நீக்கப் படுவர்.

அவ்வாறு நீக்கப்பட்ட உறுப்பினர் தலைவரிடம் முறையீடு செய்து பரிகாரம் அடையலாம்.

12. உறுப்பினர்களின்கடமைகளும், உரிமைகளும்:
---

சங்கத்தின் விதிகளுக்கு கட்டுப்பட்டு சங்கத்தின் வளர்ச்சிக்காக பாடுபடவேண்டியது ஒவ்வொரு உறுப்பினரின் கடமையாகும்.

சங்க உறுப்பினர்கள் அனைவரும் பொது குழுவில் கலந்து கொண்டு நிர்வாக கமிட்டி தேர்தலில் ஓட்டளிக்க உரிமை உள்ளவர்கள் ஆவார்கள்.

13. சங்கம் தனது கடமைகளை நிறைவேற்றும்முறைகளும், வழிவகையும்:

1. சங்கம் தனது கடமைகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்ற சங்கத் தலைவர் மற்றும் செயலாளர், நிர்வாக கமிட்டியின்உதவியுடனும் தேவைப் பட்டால்சிறப்புத் தகுதிகள்உடைய உறுப்பினர்களின் உதவியுடனும் தக்க நடவடிக்கை மேற்கொண்டு சங்க வளர்ச்சிக்காக பாடுபடுதல்வேண்டும்.

2. நிர்வாக கமிட்டி உறுப்பினர் நியமிக்கும் முறை: பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. தகுதிகள்:

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

4. பதவியிலிருக்கும் காலம்:

நிர்வாக குழு உறுப்பினர்கள் மூன்றாண்டுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் படுவார்கள். எக்காரணத்தைக் கொண்டாவது உறுப்பினர்கள் நீக்கப்பட்டாலோ, அல்லது இடம் காலியானாலோ அக்காலியிடம் தலைவர்-செயலாளர் முடிவுப்படி நிறைவுசெய்யப்படும்.

5. நிர்வாக குழுவின் எண்ணிக்கை:

குழுவில் ஒரு தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர் மற்றும் 4 நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆக மொத்தம் 7 (ஏழு) பேர்கள் இருப்பார்கள். கோரம் 2/3 பங்கு ஆகும்.

14. மாவட்டப்பதிவாளரின் பார்வைக்கும் தேர்வுக்கும் அனுப்பப்படும் கோப்புகள் மற்றும் வருடாந்திர அறிக்கைகள் விபரம்:

1. ஆண்டு முடிவில் சங்கத்தின் வரவுசெலவு இருப்பு குறித்த ஐந் தொகைப்பட்டியல்.
2. ஆண்டு முடிவில் சங்கம்செயல்படுவதற்கான சாக்ஷி
3. ஆண்டு முடிவில் அங்கத்தினராக உள்ளோரின் பட்டியல் (படிவம் 6)
4. நிர்வாககுழு மற்றும் உறுப்பினர்களில் ஏற்படும் மாற்றம் படிவம் 7 ல் மாற்றங்கள் ஏற்பட்ட 14 நாட்களுக்குள் உரிய கட்டணத் துடன் கோர்வைக்கு அனுப்பப்படல்வேண்டும்

15. வருடாந்திர கணக்குகள் கணக்காய்வு முறைகள் கணக்கு ஆய்வாளர் தகுதிகள்:

சங்க உறுப்பினர்களில் அனுபவம் வாய்ந்த நிர்வாககுழுவில் இல்லாத பல்கலைக்கழக இரண்டு பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள். அல்லது தகுதி வாய்ந்த பட்டயக் கணக்கர் நியமிக்கப்படுவர்.

16. சங்க உறுப்பினர்களின் மனுவின் பேரில் சங்க சட்டதிட்டங்கள் வரவு செலவு அறிக்கை முதலானவை கொடுக்க விதிக்கப்படும்கட்டணம்.

ரூ 1/-

17. சங்கத்தின்பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்செய்யும்தவறுகளுக்கு விதிக்கப்படும் தண்டனைகள் & தண்டனைவிபரம்

பொதுக்குழுவில் முடிவுசெய்யப்படும்.

18. சங்கத்தின் சொத்துக்கள் பராமரிக்கப்படவேண்டிய வழிவகை:

சங்கத்தின் சொத்துக்கள் தனிப்பட்ட எந்த ஒரு உறுப்பினரும்சொந்தம் கொண்டாட முடியாது. வாங்கப்படும்சொத்துக்கள் அனைத்தும் சங்கத்தின் பெயரால் வாங்கப்படும்.

19. சங்கத்தின் நிதியை மேற்கொள்ளும் விதமும், பாதுகாக்கும்முறையும்:

சங்கத்தின் நிதியை அரசு உடமையாக்கப்பட்ட வங்கியில் பொருளாளர் + தலைவர்பெயரில் டெபாசிட்செய்து, சங்கத்திற்காக செலவு செய்யவேண்டும்.

20. பிரிவு 25ன்படி நோயுள்ள அல்லது நடமாட இயலாத உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி:

பொதுக்குழுவில் முடிவு செய்யப்படும்

21. சங்கத்தின் நிதியாண்டு:

ஏப்ரல்1ம் தேதிமுதல் மார்ச்சு 31ம் தேதிமுடிய

22. வருடாந்திர பொதுக்குழு கூட்டம் நடத்தும்முறை:

வருடாந்திர பொதுக்குழு கூட்டம் ஜூன் மாதம்இறுதித் தேதிக்குள் தவறாது நடைபெறும். கோரம் 2/3 பேர் ஆகும்.

23. விசேஷ பொதுக்குழு:

மொத்த உறுப்பினர்களில்1/3 பங்கு உறுப்பினர்கள் எழுத்து கோரிக்கை மூலம் கேட்டால் சிறப்பு பொதுக்குழு கூட்டப்படவேண்டும்.

24. உறுப்பினர்களுக்கு காண்பிக்கப்படவேண்டிய பதிவேடுகள்:

அங்கத்தினர் பதிவேடு, கூட்ட நடவடிக்கை பதிவேடு மற்றும் வரவு செலவு கணக்கு புத்தகங்கள்.

25. சங்கத்தில் பேணப்படவேண்டிய பதிவேடுகள்:

1. அங்கத்தினர்கள் பதிவேடு படிவம் 6
2. நிகழ்ச்சிக் குறிப்பேடு
3. ரொக்கம் புத்தகம் : தினசரி வரவு செலவு கை இருப்பு ஆகியவை காட்டப்படவேண்டும்.
4. ரசீதுபுத்தகம் — படிவம்2ல் இருக்கவேண்டும். ஒன்று பணம்செலுத்துபவருக்கும் மற்றொன்று அடிக்கட்டையாகவும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.
5. வவுச்சர் பைல் — சங்கத்தில்ஏற்படும் செலவுகளை குறித்த ரசீதுகள் தேதிவாரியாக இருக்கவேண்டும்
6. லெட்ஜர் — எல்லாவகையான வரவு செலவும் தேதி வாரியாகஇருக்கவேண்டும்

27. சங்கத்தின் பதிவேடுகள் அதன் உறுப்பினர்களுக்கு அலுவலக நேரத்தில் கட்டணம் செலுத்தி காண்பித்தல்.

பதிவேடுகள் செயலாளர் பொறுப்பில் அலுவலகத்தில் வைக்கப்படும். அவைகளைப் பார்க்க உறுப்பினர்கள் ஐயாரிடம் கோரினால் பதிவேடுகள் கட்டணம் இன்றி பார்க்க அனுமதிக்கப்படுவார்கள்.

28. பொறுப்பாளர்களின் பணி விபரம்:

அ. தலைவர்:

மகாசபைக் கூட்டம் மற்றும் நிர்வாக சபை கூட்டங்களில் தலைமை வகிப்பார். சங்கத்தின் வளர்ச்சிக்காக தலைவர் சங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்படுவார்.

கூட்டங்களில் முடிவெடுக்கும் சமயம் வாக்கெடுப்பு நடந்து இரு பக்கமும் சமமான வாக்குகள் இருந்தால் தலைவர் தனக்குள்ள விசேஷ ஓட்டை பயன்படுத்திமுடிவெடுக்க உரிமையுண்டு.

ஆ. செயலாளர்:

சங்கத்தின் பதிவேடுகள் மற்றும் தஸ்தாவேஜுகள் இவருடைய பொறுப்பில் இருக்கும். சங்கம் சம்மந்தப்பட்ட கடிதப் போக்கு வரத்துக்களை இவரே கவனித்து வரவேண்டும். கூட்டங்கள் நடத்துவதற்கு முன்பு உறுப்பினர்களுக்கு எழுத்துமூலமான அறிவிப்பு 21 தினங்களுக்கு முன்னதாக அனுப்ப வேண்டும். சங்கத்தின் வளர்ச்சிக்கு செயலாளரின் பங்கு மிக முக்கியம். அவ்வப்பொழுது தலைவருடன் ஆலோசித்து செயல்பட்டுவரவேண்டும்.

இ. பொருளாளர்:

தன்னிடம்வந்துசேரும் பணத்திற்கு இவரே பொறுப்பு ஆகும். சங்கத்தின் செலவுகளுக்கு பணம் கொடுத்து தகுந்த ஆதாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். வருடாந்திர பொது சபைகூட்டங்களில் சங்க வரவு செலவு கணக்குகள் வாசித்துக் காட்டி ஒப்புதல்பெறவேண்டும்.

இவர் தன் கையிருப்பில் சங்க செலவுக்காக ரூ500/- வைத்துக்கொள்ளலாம். அதற்குமேற்பட்டதை வங்கியில்டெபாசிட் செய்யவேண்டும்.

29. சங்கத்தின் சைன்போர்டும் முத்திரையும்:

சங்கத்தின் பொறிமுத்திரை ஒன்று தயார் செய்து செயலாளரிடம் ஒப்படைக்கவேண்டும்.

சங்கத்தின் பெயர் பலகை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சங்கக் கட்டிடத்தின் முன் பகுதியில் வைக்கப்படுதல் வேண்டும்.

# BUDS FLOURISHING EDUCATIONAL SOCIETY

(Regd. No. 28 dated 28-5-1990)
DHARAPURAM ROAD ODDANCHATRAM-624 619
DINDIGUL ANNA DISTRICT TAMILNADU INDIA

DATE :

## துணை விதி திருத்தம்

| தற்போதுள்ளது | திருத்தப்பட்டவை |
| --- | --- |
| **துணை விதி 28 இ பொருளாளர்** | **துணை விதி 28 இ பொருளாளர்** |
| தன்னிடம் வந்து சேரும் பணத்திற்கு இவரே பொறுப்பு ஆகும். சங்கத்தின் செலவுகளுக்கு பணம் கொடுத்து தகுந்த ஆதாரவு பெற்றுக் கொள்ள வேண்டும். வருடாந்திர பொது சபை கூட்டங்களில் சங்க வரவு, செலவு, கணக்குகள் வாசித்துக் காட்டி ஒப்புதல் பெற வேண்டும். இவர் தன் கையிருப்பில் சங்க செலவுக்காக ரூ.500/- வைத்துக் கொள்ளலாம். | தன்னிடம் வந்து சேரும் பணத்திற்கு இவரே பொறுப்பு ஆகும். சங்கத்தின் செலவுகளுக்கு பணம் கொடுத்து தகுந்த ஆதாரவு பெற்றுக் கொள்ள வேண்டும். வருடாந்திர பொது சபை கூட்டங்களில் சங்க வரவு, செலவு, கணக்குகள் வாசித்துக் காட்டி ஒப்புதல் பெற வேண்டும். இவர் தன் கையிருப்பில் சங்க செலவுக்காக ரூ.5000/- வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேற்பட்டதை வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும். ரூ.3000க்கு மேற்பட்ட செலவுக்கு நிர்வாக குழு ஒப்புதலுடன் செலவு செய்யலாம். |
| **துணை விதி 30** இல்லை. | துணை விதி எண்-30<br>நமது சங்கத்தின் சார்பில் நடத்தப் பெறும் பள்ளிகளின் நிர்வாகத்தினை நிர்வாக குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்றுபேர் கொண்ட சப் கமிட்டி தான் நிர்வாகத்தை கவனித்து வரவேண்டியது. ஒவ்வொரு மாதமும் சப் கமிட்டி, நிர்வாக குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்து வரவேண்டும். அதனை நிர்வாக குழு ஆய்வு செய்துவர வேண்டும். மேற்படி சப் கமிட்டியின் பதவி காலமானது (பட்ஸ் ஃபிளாரிஷிங் கல்வி சங்கத்தின் நிர்வாக குழு பதவியில் இருக்கும்வரை மேற்படி சப் கமிட்டி பதவியில் இருக்கும். புதிய நிர்வாக குழு தேர்வு செய்யப்படும் பொழுது |

**BUDS FLOURISHING EDUCATIONAL SOCIETY**
(Regd. No. 28 dated 28-6-1990)
DHARAPURAM ROAD ODDANCHATRAM-624 619
DINDIGUL ANNA DISTRICT TAMILNADU INDIA

DATE:



புதிய சப் கமிட்டி தேர்வு செய்யப்படுவார்கள்.

துணை விதி 31.

புதிதாக சங்கத்தின் சார்பாக ஆரம்பிக்கப்பட்ட உள்ள பட்ஸ் இன்ஸ்டியூட் ஆப் ரூரல் டெவலப்மெண்ட் என்ற துணை அமைப்பு கிராமிய வளர்ச்சி தொடர்பான பணியினை செய்து வரும் மேற்படி இணை அமைப்பதற்கு நிர்வாக குழு சப் கமிட்டி ஒன்றை நியமிக்கும் மேற்படி சப் கமிட்டியில் மூன்று பேர்கள் இருப்பார்கள். மேற்படி சப் கமிட்டி பதவிகாலம் போன்றவை துணை விதியில் 30ல் உள்ளபடி நடைமுறைப்படுத்தப் பட வேண்டும்.

For Buds Flourishing
Educational Society
[signature]
President.

## பிரிவுகள் திருத்தம்

1975ம் ஆண்டு 27ம் எண்ணுள்ள பதிவு சங்கங்கள் சட்டத்தின் பிரிவுகள் எண் 28(2), மற்றும் 30 & 31 திருத்தம் செய்யப்பட்டது

நாள் 1-12-... பதிவாளர்

3/12

The seal of the Registrar of Societies, Palani, Tamilnadu.

சங்கங்கள் பதிவாளர் ... பழனி, தமிழ்நாடு.

# BUDS FLOURISHING EDUCATIONAL SOCIETY

(Regd. No. 28 dated 28-6-1990)
DHARAPURAM ROAD ODDANCHATRAM-624 619
DINDIGUL ANNA DISTRICT TAMILNADU INDIA

DATE :

## நோக்கங்கள் திருத்தப்பட்டவை

| தற்போது உள்ளவை | திருத்தப்பட்டவை |
| --- | --- |
| வரிசை எண். 11 இல்லை | கிராம புற ஊரக வளர்ச்சி திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றுவது. |
| வரிசை எண். 12 இல்லை | கிராம புறத்தில் உள்ள குறைந்த வருவாய் பிரிவில் உள்ள மக்களை ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் உயர் வருவாய் பிரிவுக்கு மேம்படுத்துதல். |
| வரிசை எண்; 13 இல்லை | கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை விவசாய திட்டங்கள் மற்றும் தரிசு நில மேம்பாடு திட்டத்தின் உதவியுடன் விவசாய அபிவிருத்தி செய்தல். |
| வரிசை எண். 14 இல்லை | கிராமபுரத்தில் உள்ள குளம், குட்டை, பாசன வசதி, வாய்க்கால் நீர்வழி வாய்க்கால் [illegible] அரசு நில உதவித் திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்தல். |
| வரிசை எண்; 15 இல்லை | பட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் ரூரல் டெவலப்மென்ட் என்ற துணை நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஊரக வளர்ச்சிதிட்டங்களை நிறைவேற்றுவது என்று தீர்மானிக்கப்படுகிறது. |

Buds Flourishing Educational Society

President.

சேர்க்கையின் திருத்தம்.

1999 ம் ஆண்டு அதன் விதிகளை
பதிவு செய்யப்பட்ட திருத்தங்களில்
சேர்க்கப்பட்ட விதி 11, 12, 13,
14 & 15 சேர்த்து, திருத்த செய்யப்பட்டது

நாள் 14/11/01

சங்கங்களின் பதிவாளர் முத்திரை, பழனி, தமிழ்நாடு.
The seal of the Registrar of Societies. Palani. Tamilnadu.

14/11/01
பதிவாளர்
13/11

பட்ஸ் பிளரிசிங் கல்விச் சங்கம்
தாராபுரம் ரோடு ஒட்டன்சத்திரம்

பதிவு எண் 28 / 90

# துணை விதி திருத்தம் / சேர்த்தல்

| தற்போதுள்ளது | திருத்தப்பட்டவை / சேர்த்தல் |
|---|---|
| துணை விதி 32.<br>இல்லை | இச்சங்கத்தால் ஒட்டன்சத்திரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளின் பெயர் பட்ஸ் பிளரிசிங் இந்து வித்யாலயா மெட்ரிக் மேல் நிலைப் பள்ளி |
| துணை விதி 33.<br>இல்லை | பள்ளியின் வளர்ச்சிக்காக செயலாளர் மற்றும் பள்ளியின் தாளாளர் வங்கிகளில் இருந்து கடன் பெற்றுக்கொள்ளாம். |

இடம் : ஒட்டன்சத்திரம்

தேதி : 10.07.2015

For Buds Flourshing
Educational Society

President
10/7/15

துணை விதித் திருத்தம்

1950 ம் ஆண்டு 28ம் எண்ணாக பதிவு செய்யப்பட்ட இச்சங்கத்தின் துணைவிதி எண் 32 மற்றும் 33 திருத்தம் செய்யப்படுகிறது.

நாள்: 17.8.15

[illegible signature]

மாவட்ட பதிவாளர்
பழனி